தேதி : 10.11.2011

# 90 நாள்… 800 கிலோ… ரூ.15,000 இலாபம் கொடுக்கும் தினை




மானாவாரியாக விளைந்து உழவர்களையும் உண்பவர்களையும் சிறப்பாக வாழ வைத்துக் கொண்டிருந்த சிறு தானியங்களின் சாகுபடி பரப்பு குறைந்து கொண்டே வருகிறது. இதற்கு மத்தியிலும் பல விவசாயிகள் விடாப்பிடியாக சிறு தானியங்களை விளைவித்துக் கொண்டுதான் இருக்கின்றனர். அவர்களில் ஒருவர் புதுச்சேரி மாவட்டத்திலுள்ள பி.எஸ்.பாளையம் (புராணசிங்கு பாளையம்) பகுதியைச் சேர்ந்த ரவிச்சந்திரன். இவர் இயற்கை முறையில் தினை சாகுபடி செய்து வருகிறார்.

இவருக்கு சொந்தமாக 55 ஏக்கர் நிலம் உள்ளது. பி.எஸ்.சி படிப்பை முடித்துவிட்டு அப்பாவிற்கு துணையாக விவசாயத்தில் இறங்கியிருக்கிறார். தொடர்ந்து 20 வருடமாக இரசாயன உரம், பூச்சிக் கொல்லிகளைப் பயன்படுத்திதான் விவசாயம் செய்துள்ளனர். மகசூல் குறைய ஆரம்பித்தவுடன் தான் இயற்கை விவசாயத்தைபற்றி அவர் தம்பி மூலம் அறிந்து கொண்டுள்ளார். ஆரம்பத்தில் சாம்பல், மாட்டுசாணம் இரண்டையும் பயன்படுத்தியுள்ளார். அதில் செலவு குறைவு என்பதால் சிறிது இலாபம் அடைந்துள்ளார். அதன்பிறகு விழுப்புரத்தில் நடந்த ஜீரோ பட்ஜெட் பயிற்சிக்குப் போய் வந்ததுள்ளார், அதன் பிறகு ஜீரோ பட்ஜெட் முறையில் விவசாயம் செய்கிறார். 10 ஏக்கரில் நெல்லி, 2 ஏக்கரில் வாழை மற்றும் பழ மரங்கள், 2 ஏக்கரில் தேக்கு, 7 ஏக்கரில் மரவள்ளி, 1 ஏக்கரில் சாமை, 1 ஏக்கரில் தினை என்று சாகுபடி செய்கிறார். 2 ஏக்கரில் கேழ்வரகு போட்டு அறுவடை செய்துள்ளார். தினை சாகுபடி செய்ய, வடிகால் வசதியுள்ள மணல்பாங்கான மண்வகை ஏற்றது. இதன் சாகுபடி காலம் 3 மாதங்கள். ஆடி, ஆவணி ஆகிய பட்டங்கள் ஏற்றவை. முதலில் இரண்டு சால் சட்டிக் கலப்பையிலும், அடுத்து இரண்டு சால் கொக்கிக் கலப்பையிலும் குறுக்க-நெடுக்காக உழவு செய்ய வேண்டும். இரண்டு கீலோ விதையை 5 கிலோ மணலுடன் கலந்து, 2 லிட்டர் பீஜாமிர்தத்தில் முக்கி எடுத்து நிழலில் உலர்த்தி விதை நேர்த்தி செய்த பிறகு, விதைத்து கொக்கிக் கலப்பை மூலம் ஒரு உழவு செய்ய வேண்டும். சாகுபடி செய்யும் காலம் மழைக்காலம் என்பதால், மண்ணில் இருக்கும் ஈரப்பதத்திலேயே 7-ம் நாளில் முளைப்பு எடுத்துவிடும். மழையில்லாத நேரங்களில் மண்ணின் ஈரப்பதத்தைப் பொறுத்து 15 முதல் 20 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் கட்டினாலே போதுமானது. 20-ம் நாளில் களை எடுக்க வேண்டும். அதற்கு மேல் பயிர் வளர்ந்து மூடிக் கொள்ளும். 20, 40 மற்றும் 60-ம் நாட்களில் 60

லிட்டர் த ண்ணீரில், 6 லிட்டர் ஜீவாமிர்தக் கரைசலைக் கலந்து, வயல் முழுவதும் தெளிக்க வேண்டும். இதற்கு எந்த இடு பொருட்களும் கொடுக்கத் தேவையில்லை.

தினையைப் பொறுத்தவரை பூச்சி, நோய் தாக்குதல் என்ற பேச்சுக்கே இடமில்லை. 70-ம் நாளில் கதிர் பிடித்து, 90-ம் நாளில் முற்றி, அறுவடைக்குத் தயாராகி விடும். தினைக் கதிர்களை மட்டும் அறுவடை செய்து, சிமெண்ட் களத்தில் காயவைத்து, அதன் மேல் டிராக்டர் மூலம் கதிரடித்தால் தூசும், மணிகளுமாக பிரிந்துவிடும். சுத்தப்படுத்தியபின் ஏக்கருக்கு சராசரியாக 800 கிலோ வரைக்கும் மகசூல் கிடைக்கும். கிலோ 25 ரூபாய் என்று விற்றால் 20 ஆயிரம் ரூபாய் வருமானம் கிடைக்கும். இதில் செலவு போக கிட்டத்தட்ட 14 ஆயிரம் ரூபாய் இலாபமாக கிடைக்கும். இதை மதிப்பு கூட்டிவிற்றால் இன்னும் இலாபம் கிடைக்கும் என்கிறார் ரவிச்சந்திரன்.

**தொடர்புக்கு**

ரவிச்சந்திரன்

அலைபேசி : 94432-36983.